[1978 பிப்ரவரி ௨8

திரு. ஜே. ஜேம்ஸ் : கல்லூரிகளில் 10(ஏ) (1) விதியின்படி பலர் நியமிக்கப்பட்டு பல ஆண்டுகளாகப் பணியாற்றியும்கூட பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் நியமனம் செய்யப்பட்டவர்கள் வருகிறபோது இவர்களை மாற்றிவிடுகிறார்கள், பிறகு மீண்டும் அரசு வேலையில் சேருவதற்கு வாய்ப்பு இல்லாத முறையில் அவர்களுடைய வயது வரம்பு அதிகமாகிவிடுகிறது. ஆகவே அவர்களையெல்லாம் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பாமல் நேரடியாகவே ரெகுலரைஸ் செய்வதற்கான முறையில் விதி முறைகளைத் திருத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் மற்றவர்களும் 5, 6 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தாலும்கூட அவர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் தேறவில்லை என்ற காரணத்தால் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள் என்பது உண்மையா ? இந்த ஆண்டு அப்படி எத்தனை பேர்கள் நீக்கம் செய்யப்பட்டார்கள் ? அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட்டால் தகவல் அளிக்கலாம்.

*307. வினா—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1973ஆம் ஆண்டில் அரசு கலைக்கல்லூரிகளில் தமிழ் பயிற்றுநர் (Tutors) பதவிகளுக்காக அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் நியமனம் செய்யப்பட்டார்கள் ?

(இ) இன்னும் எத்தனை பேர் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 120 பேர்கள். (ஆ) 103 பேர்கள். (இ) 17 பேர்கள்.

1978 பிப்ரவரி 28]

மீதமுள்ள 17 பேர்களுக்கும் தற்போது பயிற்றுநர் பதவி ஏதும் காலியில்லாததால் நியமன ஆணை வழங்க இயலாது. ஆயினும் பணியிடம் ஏற்படும்போது அவர்களுக்கு நியமன ஆணை வழங்கப்படும்.

சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த தமிழ் பயிற்றுநர்கள பதவிக்காக 1973ஆம் ஆண்டிலே கால் பார் செய்யப்பட்டு 1974ஆம் ஆண்டிலே இண்டர்வியூ நடத்தப் பட்டு, 1975 ஆம் ஆண்டிலே அவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டிருக் கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து கல்லூரிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டதால் உயர்நிலைப் பள்ளிகளில் அவர்கள் பதவிகளை இழந்து விடுகிறார்கள். அப்போது அவர்களுக்கு வயது எவ்வளவு இருக் கும் என்பதை நாம் யூகித்து அறிந்து கொள்ளலாம். கல்லூரி களிலேயும் அவர்கள் பதவிகளை இழந்து விட்டிருக்கிறார்கள். இப்படி 17 பேர்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். ஆகவே, அவர்களுக்கும் உடனடியாக வேலை கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, காலி இல்லாத இடத்தில் பதவியில் அமர்த்த இயலாது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதிலிறுத்தார்கள். ஆனால் நெருக்கடி காலத்திலே எத்தனை பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள் ? அவ்வாறு அனுப்பப்பட்டவர்களையும் மீண்டும் பணியில் அமர்த்த அரசு ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அனுப்பப்பட்டதாக கணக்கு எதையும் நான் சொல்லவில்லை.

திரு. க. சுப்பு : பயிற்றுநர்கள் என்று தேர்ந்தெடுக்கப்படுகிற போது ஒரே தகுதி, ஒரே ஆற்றல் இருந்தாலும்கூட இரண்டு பிரிவுகளாக அவர்கள் வைக்கப்படுகிறார்கள். அப்படியில்லாமல் ஒரே பிரிவு ஆக அதை ஆக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் கோரிக்கையை வைத்துப் போராட்டம் கூட நடத்துகிறார்கள். அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இனிமேல் அதுதான் நடைமுறையாக இருக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS